# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2379/03 - 2024 අප්‍රේල් මස 08 වැනි සඳුදා - 2024.04.08

*2379/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்*

*1985 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024 ஆண்டு ஏப்பிறல் 08.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024, மாச்சு 25 ஆந் திகதிய 24-0614-612-034 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு ஏப்பிறல் 01 ஆந் திகதிய, நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் கண்காணிப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அவ் விஞ்ஞாபனத்திற்கு 2024, ஏப்பிறல் 01 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.


1A - PG 6693 — 374 (2024/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. பின்னர் திருத்தம் செய்யப்பட்ட 2023 சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.

4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் 9 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ் ஒழுங்குவிதிகளில் V **ஆம் அட்டவணையில்** பட்டியலிடப்பட்டுள்ள 0713.31.22 மற்றும் 0713.31.29 ஆகிய இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உளுந்துகளை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ், இலங்கை அரச(பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனம், தேசிய உணவு ஊக்குவிப்பு சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை (ICL) வழங்க வேண்டும். மொத்தமாக 2,000 மெட்ரிக் தொன் இற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் வேறு உரிய நிறுவனங்களுக்கு **"செயற்பாட்டு ஆலோசனைகள்"** வழங்கப்படும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 04-0125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.